n/23

மாதர் போதினி

No. 255 மார்ச்சு 1919 No. 3

SCHOOL GARDEN

பள்ளிக்கூடத் தோட்டம்

1. நோக்கம்

தேசத்திலுள்ள ஜனங்களின் ஜீவனார்த்தத்தை முன்னுக்குக் கொண்டு வருவதே பள்ளிக்கூடத் தோட்டத்திலும், வீட்டில் தோட்டம்போடுவதிலும் நோக்கமாயிருக்கவேண்டும். அந்நிலைமை எவ்வாறு வரும்?

1. போஜன பதார்த்தங்களை அதிகரிப்பதினால்.—ஒரு அளவுள்ள பூமியை சரியானபடி பண்படுத்தாமலும் உரம்போடாமலும் காலாகாலத்தில் செய்யவேண்டிய வேலையைச் செய்யாமலும் இருந்தால் விளைவின் வரும்படி குறையும்; அதே அளவுள்ள பூமியை நன்றாய் புல்லற உழுது, அல்லது ஆழ வெட்டி தகுந்த உரம் போட்டு களை சரியாய் எடுத்து பதம் அறிந்து தண்ணீர் பாய்ச்சினால் விளைவின் பலன் அதிகமாகும்.

2. உணவுக்கு நானாவிதமான பொருள்களைச் சவதரிப்பதினால்.—ஒரு தானியத்தை யல்ல, வரிசை வரிசையாய் நாலைந்து தானியம் பயிர்செய்வது லாபமல்லவா? ஒரு பயிருக்குப் பின் வேறே எந்தப் பயிரிடலாம் என்றும், ஒரு நிலத்தில் வேறே என்னென்ன பயிர் உண்டாகும் என்றும் அறிவது லாபமல்லவா?

3. சத்தும் ருசியுமுள்ள ஆகாரத்தை உண்டாக்குவதினால்.—திருஷ்டாந்தமாக சோளத்தை எடுத்துக்கொள்வோம். சோளம்போட ஒரு அடி ஆழம் வெட்டி உரம்போட்டு விதைகளை நாட்டினால் கதிர் பெரிதாகவும், குலைகள் அடுக்கடுக்காகவும் சத்துநிறைந்த பெரிய மணியாகவும் இருக்கும். அதை சாப்பிடுவதினால் ருசியும், சத்தும் அதிகம். இப்படிப் பக்குவம் செய்யாவிட்டால் சத்து குறைந்து

ருசியில்லாமல் போகிறது. அரைப்படி பொங்கும் வீட்டில் ஒருபடி பொங்குவதவசியமாகிறது.

தோட்ட வேலையை முக்கியப்படுத்துவதினுலேயே இந்த நோக்கங்கள் நிறைவேறும். ஆகையால்,

(1) தோட்டம் போடுவதிலுள்ள மூலவிதிகளையும் செடிகளின் விருத்தியைப்பற்றியுள்ள பிரமாணங்களையும் பிள்ளைகளுக்கு எடுத்துப் புகட்டவேண்டும்.

(2) இந்த முக்கிய மூலப்பிரமாணங்களை பள்ளிக்கூடத் தோட்டத்திலேயே அனுசரித்துக் காட்டவேண்டும்.

(3) இப்படி பள்ளிக்கூடத் தோட்டத்தில் மாத்திரம் பிள்ளைகள் செய்து பழகுவதுமல்லாமல், அவரவர்களுடைய சொந்தவீட்டிலும் இதேமாதிரி தோட்டம்போட்டு பழகிக்கொள்ளச் செய்யவேண்டும்.

(4) பள்ளிக்கூடத் தோட்டத்திலும் வீட்டுத் தோட்டத்திலும் பிள்ளைகள் வேலைசெய்து, மேற்படி பிரமாணங்களை அப்பியாசிக்கும்போது அவர்கள் தேர்ச்சிக்குத்தக்க பிரதிபலன் அளிக்கவேண்டும். வகுப்பு மாற்றுவதில், நற்சாட்சி பத்திரம் கொடுப்பதில், வேலைக்குச் சிபார் சுசெய்வதில் ஓர் பையனுடைய தோட்டவேலையைக் கணக்கிட்டுக்கொள்வது, அவ்வேலையைப் பையன்கள் மதிப்பதற்கு ஏதுவாகும்.

2. தோட்டம்

விபசாயத்தில் சிறந்தவிபசாயம் தோட்டம்போடுதலே. தோட்டப் பயிர் செய்து கற்றுக்கொள்ளும்முறை மற்ற எந்தப் பொதுவான விபசாயத்திலும் உபயோகிக்கத்தகும் ஆகையால் ஏராளமான உணவுப் பொருட்களை விருத்தியாக்குவதற்கு செய்யவேண்டிய ஆரம்ப பிரயத்தனம் யாதெனில் பள்ளிக்கூடத் தோட்டமே. பள்ளிக்கூடத் தோட்டத்தில் சிறிது நிலத்தைப் பக்குவப்படுத்தும் விதத்தைப் படித்துக் கொள்ளுதல் வெளியில் நெல், அல்லது கோதுமை விளையக்கூடிய அதிக நிலத்தைப் பக்குவப்படுத்துவதற்குக் கருவியாகும். விஸ்தீரணமான பூமியில் பூரண பலனை அனுபவிப்பதற்கும் பற்பலவிதமான முறைகளைக் கையாடுவது அவசியமாயிருக்கலாம், ஆனுல் உத்தேசம் ஒன்றே. சொற்ப செலவுசெய்து அதிக பலனை அனுபவிப்பது எப்படி என்று கற்றுக்கொள்வதே காரியம்.

3. வேலைசெய்யும் விதம்

பிள்ளைகள் துவக்கத்திலேயே அதைரியப்பட்டுப் போகாதபடி லேசாய்ச் சித்திபெறக்கூடியதும் கஷ்டமில்லாமல் அதிகப் பலன் கொடுக்கக்கூடியதுமான சாதாரண பதார்த்தங்களைப் போடுவது நன்று;

முளைக்குமோ முளைக்காதோ, என்னமாதிரி காய்க்குமோ என்று சந்தேக முறைகளைப் பிள்ளைகள் தோட்டத்தில் கையாடக்கூடாது. அப்படிச் செய்தால் பிள்ளைகள் அதைரியப்பட்டுப் போவதுமல்லாமல் வேலையின்பேரில் விருப்பமும் அற்றுப்போவார்கள். துவக்கத்தில் தோட்டவேலை படிக்கிற பிள்ளைகள் அதைரியப்பட்டுப் போகாதபடி கூடியமட்டும் பார்த்துக்கொள்ளவேண்டும். புதிதாய் பழக்கத்திற்குக் கொண்டுவரும் பயிர்களைப் போடக்கூடாது. வழக்கமாய்ப் போட்டு அனுபோகம் பார்த்திருக்கும் செடிகளைப் போடவேண்டும். சாதாரணமாய் ஜனங்கள் விரும்பக்கூடிய சோளம், வெங்காயம், கத்திரி, மிளகாய் போடலாம். சீமைத் தக்காளி, முள்ளங்கி, சீனிக்கிழங்கு முதலியன எங்கும் முளைக்கும். விதைகள் பத்திரம்பண்ணும் விதம், விதைகள் போடுகிற தேதி, முளைக்கும் தேதி, பலன் எடுக்கும் தேதி, எவ்வளவு பலன், விற்பனை எவ்வளவு, விதைக்காக இருப்பு எவ்வளவு முதலிய யாவற்றையும் பிள்ளைகள் எழுதிவைக்கும்படி செய்யவேண்டும். மேலும் நாற்றுக்கு நிழல் வெயில் படச்செய்தல், அலங்காரமான மரங்கள் செடிகள் வைத்து தோட்டத்தை அலங்கரித்தல் முதலிய அற்பவிஷயங்களை ஆரம்பத்திலேயே தெளிவாய் படித்துக்கொள்ளவேண்டும்.

4. தோட்டத்திற்குரிய இடம்

தோட்டம் போடுவதற்கு இடம் எப்படிப்பட்டதாய் இருக்கவேண்டும்?

(1) அது போதுமானதாய் இருக்கவேண்டும். அதாவது:

- (*a*) அதில் தோட்டம் போடுகிற ஒவ்வொரு பையனுக்கும் ஓர் சின்ன பாகத்தைக் கொடுக்கக்கூடிய அளவு இருக்கவேண்டும்.
- (*b*) நாற்று விடுவதற்கு எப்போதும் உபயோகப்படுத்தும் இடம் இருக்கவேுண்டும்.
- (*c*) விதைகளை வைத்து பத்திரம் செய்வதற்குரிய இடம் இருக்கவேண்டும்.
- (*d*) கூடுமானால் ஒரு கிணறுள்ள இடமாயுமிருக்கவேண்டும்.

(2) அது தண்ணீர் கிடைக்கக்கூடிய இடமாயிருக்கவேண்டும்.

(3) அதிக மழைகாலத்தில் அதிக ஈரம் பூமியில் தங்குவதினால் செடிகள் கெட்டுப்போகாதபடி தண்ணீர் தானே வடிந்துபோகத்தக்கதாக நிலம் சரிவாயிருக்கவேண்டும். தண்ணீர் நிற்கக்கூடிய பள்ளம் பரிச்சேதம் இருக்கக்கூடாது.

(4) செடிகள் வளர்வதற்கு ஏற்றதும் செழிப்புள்ளதுமான பூமியாயிருக்கவேண்டும். இயற்கையில் அப்படியில்லையானால் ஆழமாய்த் தோண்டி உரம் புதைத்து ஏற்ற மண்சுமந்து நல்ல பூமியாக்கிக் கொள்ளவேண்டும்.

(5) காற்றுவிடும் இடம் தவிர மற்ற இடமெல்லாம் மரம் அல்லது வீட்டுநிழல் இருக்கக்கூடாது. பள்ளிக்கூடம் அல்லது வீட்டில் போடும் தோட்டம் கூடியமட்டும் மற்ற ஜனங்களும் பார்க்கக்கூடிய இடமாயிருந்தால் நல்லது. குத்தகைக்கு எடுத்துப் பயிர்செய்ய நிலங்களை அநேக வருஷத்திற்கு எடுத்துக்கொண்டால் நல்லது, ஏனென்றால் முதலாவது வருஷம் நிலங்களைத் திருத்தவேண்டியதிருக்கும். தோட்டத்தைச்சுற்றி இரும்புக்கம்பியாவது, மண்சுவராவது முள்வேலிகளாவது மூன்று அடி உயரத்தில் வேலியாகப் போடவேண்டும்.

5. தோட்ட பிளான்

தோட்டம் போடுவதற்காக இருக்கப்பட்ட நிலத்தை முதலாவது மொத்தமாக அளந்துகொண்டு பள்ளிக்கூடத்திலுள்ள பையன்களுடைய இலக்கத்திற்குச் சரியாகப் பகிர்ந்துகொள்ளவேண்டும். பொதுப்பட ஒவ்வொரு பையனுக்கும் பிரிக்கப்பட்ட பாகம் 3 அடி அகலம், 12 அடி நீளமாவது இருக்கவேண்டும்; ஒவ்வொரு பாகத்துக்கும் இடையில் 2 அடி அகலமுள்ள ரோட்டு இருக்கவேண்டும். தோட்டத்தைப் பாகமாகப் பிரிக்கும்போதும் ரோட்டு போடும்போதும் பார்வைக்கு ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் இருக்கத்தக்கதாக ஒரு கயிற்றினால் நூல் பிடித்துப் போடவேண்டும். ஒவ்வொரு பாகம் இன்னின்னாருக்கென்றும் அந்தந்த பாகத்தில் என்னென்ன வகை செடிகள் போடவேண்டும் என்பதைப்பற்றியும் உபாத்தியாயர் ஒரு தாளில் வரைந்து சுவரில் தூக்கியிருக்கவேண்டும். பிள்ளைகள் அதைப் பார்த்து தங்கள் கடமைகளைச் செய்யக்கூடும். இது என் பாகம் என்று பையன்கள் உரிமை பாராட்டும்படி வழிசெய்வதே தோட்டவேலை சித்தியாவதற்கு முக்கிய இரகசியம்.

6. பையன்களைத் தெரிந்துகொள்ளல்

தோட்டவேலை செய்வதற்கு பெலசாலிகளும் விருப்பமுள்ளவர்களுமான பையன்களைத் தெரிந்துகொள்ளவேண்டும். கிராம பள்ளிக்கூடத்தில் ஒரு உபாத்தியாயருக்கு 8–16 பையன்கள் இருந்தால் போதும். போர்டிங் பள்ளிக்கூடங்களில் 12–24 பேர் இருக்கலாம். தங்கள் சொந்த வீட்டிலும் யார் யார் கொல்லைத்தோட்டம் போட்டுக்

கொள்ளக்கூடுமோ அவர்களையே கிராம பள்ளிக்கூடத்தில் தெரிந்துகொள்வது நலம்.

ஒவ்வொரு பையனுக்கு முன்சொன்ன அளவுக்குக் குறைந்தது நாலு பங்கு அளவுள்ள சொந்த நிலம் இருப்பது நன்று. அதில் அவன் வீட்டுத் தோட்டம்போட மனதுள்ளவனுயிருக்கவேண்டும், ஊர்ப்பக்கத்தில் தரிசாக இருக்கும் நிலத்தில் பையன்கள் பயிர்செய்வது சிரேஷ்டம்.

7. நிலத்தைப் பாகம் பிரித்தல்

தாளில் போட்ட பிளான்படி பூமியில் போடுவதற்கு பையன்களை ஒழுங்குபடுத்தவேண்டும். கறையான் பிடிக்கக்கூடாத மரக்குச்சு அல்லது செங்கல் எடுத்து ஒவ்வொரு பாகத்தினுடைய நாலு மூலையிலும் 4 அங்குலம் மேலே தெரியத்தக்கதாக நாட்டவேண்டும். இன்னின்னவகை விதைகள் இன்ன இடத்தில் போடவேண்டுமென்ற இடத்தைக் குறிப்பிட்டு பையன்களுக்குக் காட்டவேண்டும். அதற்கப்புறம் அந்தந்த பாகத்தில் விதைகள் போடத்தக்கதாக பிள்ளைகள் நிலத்தைத் தயார் செய்யவேண்டும். ஒவ்வொரு பாகத்திற்குமிடையில் போட்டிருக்கிற ரோட்டில் நடந்துபோகவேண்டியதிருப்பதால் அந்தந்த பாகத்திலுள்ள ரோட்டுகளை அந்தந்த பையன்களே புல், முள் முதலியவை இல்லாதபடி சுத்தம்பண்ணுவது தங்கள் கடமை என்பதை பையன்களுக்குச் சொல்லவேண்டும். அவரவர் பாகத்தை அவரவர் கவலையோடு காப்பாற்றவேண்டும்.

THE LATE MRS. S. D. PERINBAM
(A CHARACTER SKETCH)

காலஞ்சென்ற தனம்
பேரின்பம் பாக்கியம் அம்மாளவர்களிடம்
மாதர் பின்பற்றத்தக்கதாக
விளங்கிய உத்தம இலட்சணங்கள்

இந்தப் பூமி நிலையற்ற ஓர் சத்திரம். பரமவீடு மெய்விசுவாசிகள் போய்ச் சேரவேண்டிய நித்திய வாசஸ்தலம். இந்த மண்வீடுகளில் மெய்விசுவாசிகள் தங்கும்போதே, கர்த்தர் தாமே கட்டி உண்டாக்கின திட அஸ்திபாரமுள்ள நகரத்துக்குக் காத்திருக்கிறார்கள். இங்கே வறிவாருங்கள் என்று அழைக்கும் பரமபிதாவின் சத்தம்

அவர்கள் காதுகளில் தொனிக்கும்போது கழுகுகளின் செட்டைக ளுடையவர்களாய்ப் பறந்து, தங்கள் பரம எஜமானின் சமுகத்தில் இளைப்பாறுகிறார்கள். தேகத்தைவிட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே குடியிருப்பது அவர்களுக்கு மிகுந்த ஆசை, அது அவர்களுக்குப் பிர யோஜனமாயுமிருக்கும். ஆகிலும் உலகத்திலவர்கள் விட்டுப்பிரியும் தங்கள் இனத்தார் சிநேகிதர் முதலியவர்களை வெறுமையாய் விட்டுப் போகாமல் தங்கள் சிறந்த மாதிரியை அவர்களுக்குப் பொக்கிஷமாக வைத்துப்போகிறார்கள்.

பூமியிலிருந்து மோக்ஷத்துக்குப் பிரயாணஞ்செய்யும் உன்னத பாதையிலே நாம் பின்பற்றி நடக்கத்தக்கதாக மெய்விசுவாசிகளு டைய அடிச்சுவடுகள் பெருந்தடங்களாய் இலங்கிக்கொண்டிருக்கக் காணலாம். 6,000 வருடங்களாய் இந்தத் தடங்கள் அதிகப்பட்டுப் பெருகிக்கொண்டே வருகின்றன. வேதாகமத்தில் நாம் வாசித்தறிந் திருக்கும் அநேக பரிசுத்தவான்களின் தடங்களும், நாம் காணுதிருந் தும் கேள்விப்பட்டுப் புஸ்தகங்களில் வாசித்தறிந்திருக்கிறதுமான அநேக பரிசுத்தவான்களின் தடங்களும், நாம் கண்டும், பேசியும், பழகியும் இருந்தும் நம்மைவிட்டுப் பிரிந்திருக்கும் உத்தமரின் தடங்களும் நமக்கு எதிரே பிரகாசித்துக்கொண்டிருக்கின்றன. இவ் வித தடங்களில் பலவித தவறுதல்கள், மாறுதல்கள், கோணல்கள் காணப்படுவதுண்டு. ஒரே ஒரு தடம் மாத்திரம் நித்தியபட்டணத் தின் உன்னத சிகரம் வரை வழுக்கற்று, தவறற்று, கோணலற்றுப் போய்ச் சேர்ந்திருக்கக் காணலாம். இந்த ஒப்பற்ற ஆச்சரியகரமான தடம் யாருடையது? இதுவே பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில் லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும் வானங்களிலும் உயர்ந்தவரு மான தேவகுமாரனுடைய பெருந்தடம். இதுவே நாம் பின்பற்ற வேண்டிய தடம். ஆகிலும் இதைத் தொடர்ந்து நமக்கு முன் ஞேடிய மெய்விசுவாசிகள் பின்னுக நிற்கும் நம்மைக் கூப்பிட்டு: நாங்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல நீங்களும் எங்களைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள் என்று அழைக்கிறபடியால் அவர்கள் அடிச்சுவடுகளும் நாம் அலட்சியம் செய்யத்தக்கவைகளல்ல.

சில நாட்களுக்குமுன் நமது கண்களுக்கு முன்பாக மறைந்த கனம் பேரின்பம் பாக்கியம் அம்மாளவர்களும் தாம் பின்பற்றத்தக்க பல உன்னத அடிச்சுவடுகளை நமக்கு முன்வைத்துப்போனார்கள். அவைகள் எல்லாவற்றையும் விபரமாய் எடுத்துக்காட்டுவது கூடா தாகையால், கூடிய சிலவைகளையாவது கவனித்துப் பின்பற்றுவது நமக்கு அதிகப் பிரயோஜனமாயிருக்கும். சகல கிறிஸ்தவர்களும்

அவர்களிடமிருந்து பின்பற்றத்தக்க மூன்று இலட்சணங்களை மாத்திரம் காட்டுவேன்.

I. தெய்வீக விஷயமாய்.
II. குடும்ப விஷயமாய்.
III. சிநேகிதர் விஷயமாய்.

இந்த மூன்று விஷயங்களிலும் பற்பல நல்ல அடிச்சுவடுகளை வைத்துப்போயிருக்கிறார்கள்.

I. தெய்வீக விஷயமாய் பின்பற்றத்தக்க மாதிரி.

1. கர்த்தருடைய ஆலயத்தை நேசிக்கும் வாஞ்சை.

மணி அடிக்கப்பட்டவுடன் கோவிலில் காணப்படும் முதல் ஆள் இவர்கள்தான் என்னலாம். ஒவ்வொரு நாளிலும் எந்தெந்தச் சமயத்தில் மணியடிக்கப்பட்டாலும் சரி, ஆயத்தமாய் வந்திருப்பார்கள். அலுவல் சுகவீனம் என்றும்கூடத் தடைப்படமாட்டார்கள். கஷ்டமான சுகவீனத்தையுங்கூட கவனியாமல் வருத்தப்பட்டாவது ஆலயத்துக்கு வந்து சேராவிட்டால் அவர்கள் மனத்தில் திருப்தியிராது. ஆராதிக்கவேண்டிய இடம் தூரமாயிருந்தால் பிரயாணஞ்செய்யவும் பின்வாங்கமாட்டார்கள். ஒருநாள் ஏதோ அவசரகாரியமாய் ஆலயத்துக்கு வரத் தடை நேரிட்டபோது சடுதியாய்க் காரியங்களை ஒழுங்குசெய்துவிட்டு ஆராதனைமத்தியில் ஆலயத்துக்கு விரைந்து வந்தார்கள். ஆராதனை முடிந்தபின் வீட்டுக்குப்போய் அன்று நடந்த ஆராதனையைப்பற்றி மற்றவர்கள் பேசிக்கொண்டிருந்தபோது 'என் பங்கும் கிடைத்தது, என் பங்கும் கிடைத்தது' என்று எக்களிப்பாய்ச் சொன்னார்கள்.

கர்த்தருடைய ஆலயத்தை அசட்டைசெய்யும் சகோதரர், சகோதரிகளே, இந்தச் சிறந்த மாதிரியைப் பின்பற்றுவது எத்தனை நன்று!

2. ஆராதனை சமயத்தில் காட்டும் ஊக்கம்.

ஆராதனை நடக்கும்போது அவர்கள் அசதியாயிருக்க, பக்கத்தில் எறிட்டுப்பார்க்க, தூங்க எவர்களும் காணமுடியாது. ஆராதனை நடக்கும்போதும் பாடங்கள் வாசிக்கப்படும்போதும் புஸ்தகங்களின் பேரிலும், பிரசங்கிக்கப்படும்போது பிரசங்கியின்பேரிலும் கண்கள் ஊன்றினதாயிருக்கும். ஜெபிக்கும்போது முழங்காலில் எவ்வளவு நேரமானாலும் நிற்பார்கள். சில ஆலயங்களைப் பார்க்கும் போது மிகப் பரிதாபமாயிருக்கிறது. சிறுபிள்ளைகளை விட்டு விளையாடச்செய்து அவர்களைப் பார்த்துக் சிரிக்கிறதும், ஜெபிக்கும்போது அசதியாய்க் குப்புறவிழுந்து படுத்துக்கொள்வதும், பிரசங்கிக்கும்

போது நன்றாய்த் தூங்கி விழிப்பதும் எத்தனை துக்கமான காரியம்! இப்படிப்பட்டவர்கள் இவர்களிடம் கற்று இவர்கள் மாதிரியைப் பின்பற்றுவது பெரும் நன்மையே.

3. ஜெப சிந்தை.

ஜெபம் செய்யத்தான் ஆள்வேண்டும். முழங்காற்படியிடத் தடையிராது. எந்தச் சமயத்தில் யார் வந்து ஜெபிக்க விரும்பினாலும் மிகுந்த உற்சாகமாய் ஜெபம் செய்ய எத்தனித்துவிடுவார்கள். அவர்கள் ஏதாவது கூட்டங்களில் ஜெபிக்க நேரிட்டால் கண்ணீர் சிந்தப்படாத ஜெபம் வருவது அபூர்வம். இது நமக்கு எவ்வித சிறந்த மாதிரி!

4. கர்த்தருக்கு ஊழியஞ் செய்யும் நாட்டம்.

சிறு பிள்ளைகளுக்குள் அடிக்கடி கூட்டம் நடத்துவதுண்டு. புது சபைகளைப் போய்ப்பார்த்து அவர்களை உற்சாகப்படுத்துவதும் அவர்களுக்குப் பிரியம். ஸ்ரீவைகுண்டம் கோவில்விஷயமாய் வேலை செய்தவர்களில் இவர்களுக்கு இணையானவர்கள் ஒருவருமில்லை. பகலின் வெயிலும் இரவின் குளிரும் அடிக்கடி நித்திரையின்மையும் இவர்களுக்குப் பெரிதாய்த் தோன்றவில்லை. மொத்தமாய், இவர்கள் செய்த கடுமையான வேலையே இவர்களுடைய சடுதியான மரணத்திற்குக் காரணமென்று பலர் சாக்ஷியிடுகிறார்கள்.

5. உதாரமாய்க் காணிக்கைகள் செலுத்தும் விஷயத்தில்.

இது விஷயத்தில் இவ்விருதயமுள்ள பலரைக் கர்த்தர் எழுப்புவாராக. தனக்குரியதெல்லாம் கர்த்தருடையதென்று எண்ணிக்கொண்டிருக்கும் இவர்கள் காணிக்கை செலுத்தும் விஷயத்தை விவரிப்பானேன்? ஸ்ரீவைகுண்டம் ஆலயவிஷயமாய்ப் பெருந்தொகையும், மாதாமாதம் ஒரு குருவானவர் சம்பளமும், இந்திய மிஷனெரி சங்கத்துக்கு உதாரமான காணிக்கையும் கொடுக்கப்பட்டும் இன்னமும் நூதனமான நற்காரியங்களுக்கெல்லாம் தங்கள் பணப்பெட்டியைத் திறக்க முந்தி நிற்பார்கள். 'பணப்பெட்டிக்குச் சமீபித்துவரும் பக்தியே மெய்பக்தி' என்று ஒரு பரிசுத்தவான் சொல்லுகிறபடி, இவர்கள் தேவபக்தி மெய்யானதென்று இவர்கள் பணப்பெட்டியும் கூட சாக்ஷியிடும். இவ்வித உற்சாக பலிகளின்பேரில் தேவன் பிரியமாயிருக்கிறார். காணிக்கை செலுத்துவதைக் கஷ்டமாக எண்ணும் சிநேகிதரே, இவ்வித மாதிரியைப் பின்பற்றுவோமாக.

6. தேவ சித்தத்துக்கு அமையும் குணம்.

கர்த்தர் தனக்குப் பெரிய தயவுபாராட்டியிருப்பதாக அடிக்கடி நன்றியறிதலோடு சொல்லுவார்கள். துன்பகாலங்களிலும் இவை

மறந்துவிடமாட்டார்கள். இன்பத்தில் மனப்பூரிப்பும் துன்பத்தில் மனச்சலிப்பும் காட்டுவது உலக இயல்பு அல்லவா? இவர்களோ இன்பத்தில்போலவே துன்பத்திலும் காணப்படுவார்கள். இவர்கள் சுகவீனமாயிருந்த ஒரு சமயத்தில் சுகசெய்தியை விசாரிக்கப் போனவர்களிடம்: கர்த்தரிடமிருந்து எவ்வளவோ திரளான நன்மைகளைப் பெற்றிருக்கும்போது இந்தச் சிறு துன்பத்தில்மாத்திரம் மனச்சோர்வடைவது நியாயமாவென்று கேட்டார்கள். மரணத்துக்கு முந்திய ஒருமாதத் துன்பத்திலும், யோர்தானைக் கடக்கும்போதும் இவர்களில் விளங்கிய பொறுமை பார்த்த சகல இந்துக்களுக்கும் கிறிஸ்தவர்களுக்கும் ஆச்சரியத்தையும் விசேஷித்த மாதிரியையும் கொடுத்தது.

II. குடும்பவிஷயமாய்ப் பின்பற்றவேண்டிய இலட்சணங்கள்.

1. தன் கணவரை நேசிக்கிறதிலும், கனப்படுத்துகிறதிலும், அவர்களுக்குக் கீழ்ப்படிந்து பணிவிடை செய்கிறதிலும், அவர்கள் ஏவாமலே அவர்களுக்கு ஆகவேண்டியவைகளை ஒழுங்குசெய்வதிலும் அவர்களுக்கு இணையானவர்களைக் காண்பது வெகு அபூர்வம். ஒரு நாளாவது தன் கணவருக்கு மனவருத்தத்தைக் கொடுக்கக்கூடிய ஒரு காரியத்தையாவது இவர்கள் செய்ய எவரும் பார்த்திருப்பதில்லை; அடிக்கடி சண்டைசச்சரவுகள் செய்துகொள்ளும் கிறிஸ்தவக் குடும்பங்கள் இவ்வித மாதிரியைப் பின்பற்றுவது நமது மார்க்கத்துக்குப் பெரும் மகிமையே. இவ்வித உத்தம துணைவியை இழந்துவிடுவது அவர்கள் கணவருக்கு உலகப்பிரகாரமாய் சகிக்கக்கூடிய துன்பமா? கர்த்தரே அவர்களுக்கு நிறைந்த ஆறுதலை அளிப்பாராக.

2. தன் பிள்ளைகளை நல்வளர்ப்பில் வளர்க்கும் விஷயமாய்.

தன் பிள்ளைகள்பேரில் மிகுந்த அன்புள்ளவர்கள். அவர்களிடம் பிசகுகள் காணப்படும்போது கவனியாமல் விட்டுவிடுகிறவர்களுமல்ல. தன் பிள்ளைகளின் சரீர நன்மைகளை விரும்புவதுபோலவே அவர்களுடைய ஆத்தும நன்மைகளைப்பற்றியும் பெரும் வாஞ்சையுள்ளவர்களாய்க் காணப்படுவார்கள். பெற்றோருக்கு இதுவிஷயமாய் நல்மாதிரி காட்டினார்கள்.

3. தன் இனத்தாருக்குள் நடந்துகொள்ளும் விஷயமாய்.

இந்விஷயமாய் மற்ற எவர்களிடமும் காணப்படாத உத்தம இலட்சணத்தை இவர்களிடம் காணலாம். தன் குடும்பத்தார்பேரில் ஒரு விதமாயும் தன் கணவர் குடும்பத்தார்பேரில் வேறுவிதமாயும் இருப்பது உலக இயல்பு. இவர்களிடமோ இது கொஞ்சமும் காணப்

படவேமாட்டாது. சொல்லவேண்டுமானல் தன் குடும்பத்தாரைவிட தன் கணவர் குடும்பத்தின்பேரில் அதிகப் பாசமுள்ளவர்களென வேண்டும். தன் கணவர் தன் குடும்பவிஷயமாய் எவ்வளவு செலவு செய்தாலும் அதை எண்ணவும், அதைப்பற்றிக் கொஞ்சமாவது மனவருத்தம் காட்டவுமாட்டார்கள். ஒருநாள் இதுவிஷயமாய் சில சிநேகிதருடன் பேசிக்கொண்டிருக்கையில்: எல்லாம் அவர்களுடையது, அவர்களே பிரயாசப்பட்டுச் சம்பாதிக்கிறார்கள். நான் சம்பாதிப்பது ஒன்றுமில்லையே. அவர்களுடையதை அவர்கள் என் தன் இஷ்டப்படி செலவு செய்யக்கூடாது என்று கேட்டார்கள். ஆ! கிறிஸ்தவ குடும்பங்களுக்கு இது எவ்வளவு ஏற்ற சிறந்த மாதிரி!

III. சிநேகிதர் விஷயமாய் இவர்களிடமிருந்து பின்பற்ற வேண்டிய சில நல்மாதிரிகள்.

1. பொதுவாய் யாவரோடும் மிகுந்த அன்பாயிருப்பார்கள். எந்த நிலைமையுள்ளவர்களையும் வித்தியாசமில்லாமல் நேசிப்பார்கள். மற்றவர்களுடைய துன்பவேளைகளில் விசேஷித்த அனுதாபம் காட்டுவார்கள். மற்றவர்களுக்கு மனவேதனையைக் கொடுக்கக்கூடிய வெடுவெடுப்பான வார்த்தை, கோபமான பேச்சு கிடையாது. யாவரோடும் அன்பாயிருக்கவே நாடுவார்கள். மெய்க்கிறிஸ்தவனின் உத்தம இலட்சணமும் இதுவே. நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால் அதினால் என் சீஷராயிருப்பீர்களென்று இயேசு இரக்ஷகர் மொழிந்தார். இவ்வித மாதிரி நமது ஜீவியத்திலும் விளங்குவதாக.

2. மிகுந்த மன அடக்கமாயிருப்பார்கள்.

வீண்பேச்சு, புறங்கூறல், பெருமையான வார்த்தைகள், அவர்கள் பேச எவரும் கேட்டிரார்கள். ஒருவரைப்பற்றிப் பேசக்கூடிய நற்காரியங்களிருந்தால் சுருக்கமான இரண்டொரு வார்த்தைகள் அவர்கள் வாயிலிருந்து புறப்படலாம்; ஒருவரைக் குறைகூறத்தக்க காரியங்களிருந்தாலோ வாயை மூடிக்கொள்வார்கள். தன் நாவை அடக்குகிறவன் பட்டணத்தை அடக்குகிறவனிலும் விவேகி என்று ஞானி சொல்லுகிறார். தன் நாவை அடக்குதலே உத்தம தேவபக்தியின் மெய் இலட்சணமென்று யாக்கோபு கூறுகிறார். நாமும் இவ்வித மாதிரியைப் பின்பற்றி எச்சரிக்கையாய் நடந்துகொள்வோமாக.

3. அதிகப் பொறுமை.

மற்றவர்கள் தனக்கு வருத்தத்தைக் கொடுத்துவிட்டாலும் அதற்காக அவர்களோடு மனஸ்தாபம் செய்துகொள்ளுகிறதில்லை. சில

வேளைகளில் அவர்கள் காட்டும் பொறுமையே அவர்களுக்கு மன வருத்தத்தைக் கொடுத்தவர்களுக்குப் பெருந்துக்கத்தைக் கொடுத்திருப்பதுண்டு. தீமையை நன்மையினாலே வெல்லப் பிரயாசப்பட்டார்கள் எனலாம். நாமும் இவ்வித மாதிரியைப் பின்பற்ற உன்னத பெலன் கிடைப்பதாக.

4. மனத்தாழ்மை.

இந்த இலட்சணத்தில் இவர்கள் சிரேஷ்ட கிருபை பெற்றவர்கள் என்றுதான் சொல்லவேண்டும். மற்றவர்களைத் தனக்கு மேலானவர்கள் போலவும் தான் அவர்களுக்குக் கீழ்ப்பட்டவர்கள் போலவும் பாவித்து நடந்துகொள்வார்கள். ஒருநாள் இவர்கள் வீட்டுக்கு ஒரு போதகர் வந்திருந்தார்கள். அவர்களுக்கு இவர்கள் காட்டிய உபசாரத்தையும், காண்பித்த தாழ்மையையும் கவனித்த போதகரவர்கள் இவர்கள் வீட்டைவிட்டுக் கொஞ்சத்தூரம் போனபின் தன்னோடு கூடப்போன ஒரு ஆளைப்பார்த்து: 'இந்த அம்மாளிடம் காணப்படும் தாழ்மை எத்தனை ஆச்சரியமாயிருக்கிறது! இவ்வித நிலைமையுடைய பலர் மற்றவர்களைச் சிறிதும் கவனிக்கமாட்டார்களே' என்றார்கள். இவ்வித தாழ்மையை இவர்களிடமிருந்து கற்றுக்கொள்வோமாக. தாழ்மையுள்ளவர்களுக்குத் தேவன் கிருபை அளிக்கிறார்.

5. தேவ ஊழியக்காரர் விஷயமாய்க் காட்டிய மாதிரி.

'உங்களை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்ளுகிறான்' என்னும் பரம எஜமானின் வார்த்தை எப்போதும் மனதிலிருக்கும்போலும். குருப்பட்டம் பெற்றிருக்கும் போதகன்மாரை அவர்கள் நேசித்து மதிப்பதிருக்கட்டும். சொற்பச் சம்பளம் பெற்று அவர்கள் அந்தஸ்துக்கு எவ்வளவோ குறைந்தவர்களென்று அவர்கள் எண்ணிக்கொள்ளக்கூடிய மனிதர்களைக் கண்டாலும் மரியாதைசெய்ய முந்திக்கொள்வார்கள். சிலவேளைகளில் அவர்கள் மரியாதை செய்யும் சத்தத்தை அறிந்தே அவர்கள் அங்கிருப்பதாகத் தெரியவருவதுமுண்டு. வெறும் மரியாதை மாத்திரமல்ல, அவர்கள் அவசிய வேளைகள் அறிந்து ஏற்ற உதவிகளும் செய்வார்கள். இவர்களால் உதவிபெற்ற மனிதர்கள் இதற்குச் சாக்ஷிகளாயிருக்கிறார்கள்.

'நீ உத்தமனை நோக்கி செம்மையானவனைப் பார்த்திரு. அந்த மனிதனுடைய முடிவு சமாதானம்.'

A DREAM

ஓர் சொப்பனம்

சாத்தான் சிம்மாசனத்தில் வீற்றிருப்பதாகவும், சுற்றிலும் அவன் தூதர்கள் நின்றிருப்பதாகவும் ஒருவன் கனுக்கண்டான். அவன் ஊழியர் அவன் கட்டளைக்குக் காத்து நின்றிருந்தார்கள். 'மானிடரின் ஆத்துமாக்களை அழிக்க எவன் வல்லவன்?' என்று சாத்தான் கேட்கவே, 'நான் போகிறேன்' என்று தூதர்களில் ஒருவன் மொழிந்தான். 'நீ அவர்களுக்கு என்ன போதகம் பண்ணுவாய்?' என்று சாத்தான் கேட்க, அந்த தூதன், 'நான் அவர்களுக்குக் கடவுள் இல்லை என்று போதிப்பேன்' என்றான். அதற்கு சாத்தான், 'அது முடியவே முடியாது. மனிதர் சில சமயம் கடவுள் இல்லை என்று வெளிக்கு சொல்வார்கள், ஆனால் அவர்களே கடவுள் இருக்கிறாரென்று திட்டமும் தெளிவுமாகத் தங்கள் உள்ளத்தில் உணருவார்கள். சாதாரணமாய் இருக்கும்பொழுது கடவுள் இல்லையென்று மறுப்பார்களாயினும், வியாதி முதலிய கஷ்டங்கள் நேரிடுகையில் அவர்கள் கடவுளைப் பற்றிப் பிடிப்பார்கள். உன் உபாயம் சித்தி பெறாது' என்று சொல்லிவிட்டான்.

இரண்டாந்தரம் அதே கேள்வியைச் சாத்தான் கேட்டபோது, இன்னொரு தூதன் தான் போவதாகச் சொன்னான். 'நீ என்ன செய்வாய்?' என்று சாத்தான் கேட்க, அந்த தூதன், 'மனிதர் பரிசுத்த தேவனை அணுகப் பாத்திரவான்களல்லாத அவ்வளவு கெட்டவர்கள் என்று நான் போதிப்பேன்' என்று சொல்ல, சாத்தானனவன், 'இதுவும் முடியாது. ஏனென்றால் மனிதர் துன்பத்தால் நெருக்கப்படுகையில் அவர்கள் கடவுளண்டை அணுகாமலிருக்கமுடியாது. அதுவுமல்லாமல், அவர்கள் கையில் வேதவசனம் இருக்கும்வரையில் அவர்கள் வாசித்து, தாங்கள் எவ்வளவு பாவிகளானாலும் கடவுளண்டை வரலாம், நித்தியஜீவனைப் பெறலாம் என்று அறிந்துகொள்வார்கள். "இழந்துபோனதைத் தேடவும் இரக்ஷிக்கவும் மனுஷகுமாரன் வந்தார்" (லூக். 19.10). இதைவிட வேறு நல்ல உபாயம் எனக்கு வேண்டும்' என்றான்.

மூன்றாந்தரம் அதே கேள்வியைச் சாத்தான் கேட்கையில் ஒரு அமைதல் உண்டாயிற்று. ஒரு தூதன் வந்து, 'நான் போவேன்' என்றான். 'நீ என்ன செய்வாய்?' என்று சாத்தான் கேட்க, அவன், 'நான் அவர்களுக்குக் கடவுள் உண்டென்று சொல்வேன்; அவர்கள் இஷ்டப்படி தேவவசனத்தைக் கேட்கும்படி விடுவேன்;

தேவகுமாரன் பாவிகளுக்காக மனித அவதாரம் எடுத்து இழிவான சிலுவையின் மரணத்தையடைந்தார் என்று அவர்கள் விசுவாசிப்பதையும் தடைசெய்யேன். விலையுமின்றிப் பணமுமின்றி இரக்ஷிப்பைப் பெறலாம் என்று அவர்கள் அறிந்திருப்பதற்கு மாறாகவும் ஒன்றும் சொல்லேன்' என்று சொல்லிக்கொண்டே போவதைக் கேட்டுக் கொண்டிருந்த சாத்தான் இனிமேல் பொறுக்கக்கூடாதவனாய், 'இவைகளெல்லாம் எப்படி மனிதரை அழிக்கக்கூடும்?' என்று வினவ, தூதன், 'இவைகளெல்லாம் உண்மை என்று நான் அவர்களுக்குச் சொல்வேன். ஆனால் நித்தியஜீவனை ஏற்றுக்கொள்ள இன்னும் காலம் இருக்கிறது, இப்போது அவசரமில்லை; இன்னும் காலம் இருக்கிறது, இப்போது மரணமில்லை என்று சொல்லிக்கொண்டே இருப்பேன்' என்று சொல்லி முடியுமுன்னமே, எல்லா தூதர்களும் கைகொட்டி, அவன் யுக்தியை மெச்சினார்கள். இதற்கிசைய சாத்தானும் 'நீ போகலாம். நீ மெய்யாகவே சித்திபெறுவாய்' என்று சொன்னான். இவ்விதமாக ஓர் மனிதன் கனவுகண்டான். மூன்றாந் தூதன் சொன்னதுபோன்ற ஏமாற்றுதலான வார்த்தைகள் இப்போதும் ஆயிரமாயிரமான மனிதர் காதுகளில் தொனிக்கின்றனவே. இதைக்கேட்டு ஏமாறுகிறவர் எத்தனைபேர்!

இது என்ன, கனவா? கனவுகண்டவன் உலகத்தில் வர எத்தனை ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயோ, மனிதரின் ஆத்துமாக்களை அழிக்க பாதாளலோகப் பிரபுவால் இந்த ஆலோசனை யோசிக்கப்பட்டது. இரக்ஷிப்பின் பிரசங்கம் உன் காதுகளில் தொனிக்கப் படுகையிலேயே, சாத்தானும் 'இன்னும் காலம் இருக்கிறது. குணப்பட இப்போது தேவையில்லை' என்று சொல்லுகிறானே. நாம் என்ன செய்வோம்? இந்த நிமிஷம்தான் நம்முடையது. நாளை நம்முடையதோ? நாளை கர்த்தருடையது. இந்த நிமிஷந்தான் நித்தியஜீவன் நமக்கு அளிக்கப்படுகிறது. இந்நேரமே அதைப் பெற்றுக்கொள்வோமாக. 'இதோ, இப்போது நற்பிரியமான காலம்; இதோ, இப்போது இரக்ஷிப்பின் நாள்.' (2 கொரி. 6. 2.)

'THY WILL BE DONE'

கடவுளின் திருச்சித்தமே நல்லது

ஓர் விதவைக்கு ஒரே புத்திரன் இருந்தான். அவன் இருபத்து நான்கு வயதான வாலிபனாயிருந்தபோது விஷஜுரங்கண்டு மரணப் படுக்கையிலிருந்தான். தாயோ ஆதரவற்றவளாய் புலம்பித் தவித்தாள்.

மரணத்திற்குச் சமீபமான அறிகுறிகளெல்லாம் தோன்றிவிட்டன. விதவையோ என்னசெய்வாள்! ஓயாமல் கர்த்தரை நோக்கி ஜெபம் செய்துகொண்டே யிருந்தாள். மகனைவிட்டுப் பிரியவில்லை. போதகர் வந்து ஜெபம் செய்தார். அவர் உருக்கமாய் ஜெபம் செய்கையிலே 'கர்த்தருக்குச் சித்தமானால் இவ்வாலிபன் பிழைத்து தன் தாய்க்கு உதவியாயிருக்கட்டும்' என்றார். 'கர்த்தருக்குச் சித்தமானால்' என்ற வார்த்தைகளைக் கேட்டதும், விதவை கூக்குரலிட்டு, 'ஐயையோ! என்ன ஐயா! கர்த்தருக்குச் சித்தமானால் என்று சொல்லுகிறீரே. கர்த்தருக்கு என் மகனை எடுத்துக்கொள்ளத்தான் சித்தம். எனக்குக் கட்டாயம் என் மகனைக் கொடுக்கவேண்டும்' என்று ஜெபம் செய்யுங்கள் ஐயா. என் மகனைவிட்டு எனக்கு ஆதரவு என்ன?' என்று கதறினாள். குரு, 'என்ன அம்மா! அதெப்படி நாம் கட்டாயம் என்று விண்ணப்பம் பண்ணலாம்? கடவுள் தமது ஞானமுள்ள சித்தப்படி செய்யட்டும் என்றல்லோ நாம் ஜெபிக்கவேண்டும்' என்று பலவாருகச் சொல்லியும், விதவை உடும்புப்பிடியாய் தன் மகனைத் தனக்குக் கட்டாயம் தரவேண்டுமென்றே ஜெபம்செய்தாள். நாளடைவில் வாலிபனுந் தேறி சுகமடைந்தான். தாய்க்கு இருந்த சந்தோஷத்திற்கோ அளவில்லை. வருஷங்கள் சில சென்றன. இதே வாலிபன் பெரிய குற்றத்தில் அகப்பட்டு தூக்குப்போடப்படுவதற்காகத் தூக்குமேடையில் நிற்கிறான். கண்ணீர்விட்டுக் கட்டாயமாகத் தன் புத்திரனைக் கொடுக்கவேண்டுமென்று ஜெபம்செய்த தாயும், 'கர்த்தருக்குச் சித்தமானால்' என்று ஜெபம் செய்யவேண்டும். நாம் கட்டாயமாக யாதொன்றையும் கடவுளிடம் கேட்கலாகாது என்று சொன்ன குருவும் இந்தக் காட்சியைப் பார்த்து நின்றார். குரு அந்த விதவைக்கு, 'முன்னமே மரணத்திற்குச் சமீபமாய் வியாதியாயிருந்தானே. அப்போதே அவன் மரித்திருந்தானேயாகில் பாக்கியமாய் நித்தியபேரானந்தத்தையடையப் போயிருப்பானே! இந்த நிலைமைக்குள்ளாகி நித்திய அழிவுக்குப் போகவா நீ இந்தமாதிரி ஜெபம்செய்தாய்! கர்த்தரின் சித்தத்தை முறித்து உன் சித்தத்தின்படி நடந்ததினால் வந்த நிர்ப்பாக்கியத்தைப் பார்த்தாயா!' என்று உணர்த்தாமலிருந்தாரோ? விதவை மாலை மாலையாய்க் கண்ணீர் சொரிந்து தனக்கு ஊன்றுகோலாயிருந்து தன்னை ஆதரிப்பானென்று நம்பியிருந்த மகன் இப்படித் தன் குலத்தைக் கெடுக்க வந்த கோடரிக்காம்பாய்த் தூக்குமேடையில் நிற்கிறதைக் கண்டு மனமடிவுற்றாள். கர்த்தரின் சித்தத்திற்கு மேலாக நமது சித்தம் செய்யப்படவேண்டுமென விரும்பும் சகோதரரே! இதோ தூக்குமேடையில் நிற்கும் வாலிபனும் அதனடியில் புலம்பிநிற்கும் அவன் மாதாவும் நமக்கு நல்ல

படமாயிருக்கின்றனர். நாம் நமது காரியங்களை நம்மை ஆண்டு நடத்தும் கடவுளின் ஞானமுள்ள திருச்சித்தத்திற்கு ஒப்புவித்து அமர்ந்திருப்போமாக.

'கர்த்தாவின் சித்தம் நல்லதே—அதின்படி ஆகட்டும்
ஒத்தாசை செய்து வாராரே—இடுக்கமும் இக்கட்டும்
வந்தால், அன்பாய், நற்பத்தியாய்—இருப்பவரைப் பார்ப்பார்;
கர்த்தர் துணை என்றவரை—சார்ந்தோர்களைத் தற்காப்பார்.'

GOD'S LOVE

தேவனின் அன்பு

ஒரு தகப்பனுக்குச் சில பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஒருவன் தனக்குச் சேரவேண்டிய சொத்துக்களைக் கேட்டு வாங்கிக் கொண்டு தூரதேசம் சென்று, ஆஸ்திகளையெல்லாம் அழித்து, மறுபடியும் தன் தகப்பன் வீட்டிற்கு வந்து, தகப்பனின் பெட்டிகளையெல்லாம் இன்னும் பணமிருந்தால் எடுத்துக்கொண்டுபோகலாம் என்ற நோக்கத்தோடு ஆராய்ந்தான். அப்போது அவனுடைய துரோகமான எண்ணத்திற்கு முற்றிலும் மாறாக அவன் தனக்குச் சேரவேண்டிய பங்கிற்குப் பதின்மடங்காக அவன் பேருக்கு எழுதியிருந்த ஒரு உயிலைக் கண்டு, மகன் பொறுக்கக்கூடாத ஆனந்தமுள்ளவனாகித் தான் உயிலைக் கண்ட இடத்திலேயே உயிர்துறந்தான்.

ஆம் சகோதரரே! நாம் தேவனின் அன்பை ருசிபாராதவர்களாய் அந்த கெட்டமகனைப்போல் இருக்கிறோம். அவர் கிருபை நமக்குப் போதாது என்று முறுமுறுக்கிறவர்களாகவே இருக்கிறோம். நன்றிகெட்டவர்களாகிய நாம் தேவன் தமது ஒரே குமாரனாகிய இயேசு இரக்ஷகரை நமது பாவங்களினின்றும் மீட்க இவ்வுலகில் அனுப்பினதினால் நம்மைத் தமது பிள்ளைகளாக்கிக்கொண்டார் என்று அந்த உயிலைக் கண்டதும் நாம் நமது நன்றிகெட்டதனத்தையும், தேவனின் அளவற்ற அன்பையும் காண்கையில், நாம் உயிர்துறக்கவேண்டியதில்லையா? தேவ அன்பை ருசிபாராமல் உயிர்துறப்பதில் பயனில்லை. ஆதலால் சீக்கிரமாக தேவனின் அன்பை நாம் ருசித்து நன்றியுள்ளவர்களாய் அவருக்கு ஊழியஞ்செய்து பிழைப்போமாக.

Lydia Vedanayagam.

MARTIN LUTHER AND SATAN

மார்டீன் லுத்தரும் சாத்தானும்

மார்டீன் லுத்தர் ஒருதரம் ஒரு சொப்பனம் கண்டார். கனவில் அடர்த்தியாய் எழுதிய பெரிய சுருள் ஒன்று சாத்தான் கொண்டு வந்து அவர்முன் விரித்து அவரை வாசிக்கச்சொன்னான். லுத்தர் வாசித்தார். அதில் அவர் செய்த பாவங்களெல்லாம் குறிப்பிடப் பட்டிருந்தன. தான் செய்யாத எந்தப் பாவத்தையேனும் குறிப்பிட் டிருக்கமாட்டானா என்ற நோக்கத்தோடு பின்னும் அதை வாசித்தார். அப்பேர்ப்பட்டதொன்றும் அவர் காணவில்லை. தான் மறந்ததும் மறவாததுமான சகல பாவங்களும் அதில் குறிப்பிடப்பட்டிருந்தன. வாசித்து முடிந்ததும், 'இவைகள்தானா என் பாவங்கள்?' என்று இவர் வினவ, சாத்தான் 'இல்லை' என்றான். 'நான் என் எல்லாப் பாவங்களையும் பார்க்கட்டும்' என்றார் லுத்தர். சாத்தான் திரும்பவும் அதைப்போலொத்த ஒரு பெரிய சுருளைக் கொண்டுவர, லுத்தர் அதை வெகு கவனமாய் வாசித்தார். அதில் தன் பாவங்களெல்லாம் திட்டமுந் தெளிவுமாய்க் குறிக்கப்பட்டிருக்கிறதைக் கண்ட லுத்தர், 'இவ்வளவுதானா என் பாவங்கள்?' என்று கேட்க, சாத்தான் 'ஆம்' என்றான். 'அப்படியானால் என் பேனாவில் சிகப்பு மை தொட்டு அந்தச் சுருளின் குறுக்கே "இயேசுகிறிஸ்துவின் சித்தம் நம்மை எல்லாப் பாவமும் நீங்கச் சுத்திகரிக்கிறது" என்று எழுது' என்றார்.

நாம் லுத்தரைப்போல் தைரியத்தோடு அப்படி சொல்லக்கூடிய வர்களாயிருக்கிறோமா? கிறிஸ்துவின் இரத்தத்திற்காக நாம் கர்த்தரை ஸ்தோத்திரிக்கக்கூடியவர்களாய் இருக்கிறோமா?

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் மார்ச்சு மீ

1 ச.	லூக்.	8.	41—56	11 செ.	லூக்.	11.	29—44	31 வெ.	லூக்.	14.	25—35
2 ஞா.	,,	9.	1—17	12 பு.	,,	11.	45—54	22 ச.	,,	15	1—10
3 தி.	,,	9	18—36	13 வி	,,	12.	1—15	23 ஞா	,,	15.	11—32
4 செ.	,,	9	37—5[illegible]	14 வெ	,,	12	16—34	24 தி.	,,	16	1—18
5 பு.	,,	9	51—62	15 ச	,,	12	35—48	25 செ.	,,	16	19—31
6 வி.	,,	10.	1—16	16 ஞா	,,	12	49—59	26 பு.	,,	17	1—10
7 வெ.	,,	10	17—28	17 தி	,,	13.	1—17	27 வி.	,,	17.	11—25
8 ச.	,,	10	29—42	18 செ.	,,	13.	18—35	28 வெ	,,	17.	26—37
9 ஞா.	,,	11.	1—13	19 பு.	,,	14.	1—14	29 ச.	,,	18.	1—17
10 தி.	,,	11.	14—28	20 வி.	,,	14.	15—24	31 தி.	,,	18.	31—43

C. L. S. PRESS, MADRAS—1919